10/=

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 54 சனிக்கிழமை ஜூலை 01 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## தீவிரவாத பிக்குகள் குறித்து வாய்திறக்க மறுப்பதேன் !



தீவிரவாத பௌத்த பிக்கு மார் தொடர் பில் ஏன் எவரும் கருத்துக் கூறுவதில்லை என்று முன்னாள் ஜனா திபதி சந்திரிகா குமார துங்க கேள்வி எழுப்பியுள்ளார். ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வி யொன்றில் அவர் இதனைக் குறிப்பிட் டுள்ளார். குறித்த ஒரு பௌத்த மதகுரு வன்முறையான செயற்பாடுகளில்ஈடுபட்டு வரு கிறார். எனினும் எவரும் அதைப்பற்றி பேசுவதில்லை. முன்னாள் ஜனாதிபதி மஹிந் தவின் அணி, நல்லிணக்கத்துக்கு ஆதரவளிக்கவில்லை. மஹிந்த ராஜபக்சவே இந்த மதகுருவின்செயற் பாடுகளை ஆரம்பித்து வைத்தார். இந்தநிலையில் பௌத்த உயர்பீட பிக்குகளும் குறித்த மதகுரு தொடர்பில் கருத்துக்களை வெளி யிடாமல் இருப்பது கவலைக்குரியது என்றும் சந்திரிகா குமாரதுங்க தெரிவித் துள்ளார். (உ)

# வடக்கு - கிழக்கு இணையாது
# சமஷ்டி கிடையாது

உண்மையை ஒப்புக்கொண்டார் சுமந்திரன்



வடக்கு கிழக்கு இணைப்பு தற் போது சாத்தியப்படாது. சமஷ்டி எனும் சொல் வெளிப் படையாக இல்லாவிட்டாலும் அதன் பிரதான குணாம்சங்கள் புதிய அரசியல் யாப் பில் உள்ள டங்கி உள்ளது என பாரா ளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசி யக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சா ளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரி வித்துள்ளார். இன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் பாராளு மன்ற உறுப்பினர் 06

## பெற்றோலிய தொழிற்சங்கமும் போராட்டத்துக்கு தயார்!



பெற்றோலியத் தொழிற் சங்கத்தின் இணைப்பா ளர் ராஜகருணா எச்சரிக்கை விடுத்துள் ளார். தமக்கு வழங்கப் பட்ட வாக்குறுதி களை செயற்படுத்துவ தனை அரசாங்கம் தாமதப்படுத்தி வரு கின்ற நிலையிலேயே மீண்டும் போராட்டத்தை ஆரம்பிக்க தீர்மானித்துள் ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கத்துக்கு ஒரு வாரகால அவகாசம் வழங்கப்படும். அடுத்த வாரத்திற்குள் தீர்வு கிட்டாத பட்சத் தில் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் கூறினார். (எ)

திருகோணமலை எண் ணெய்க் களஞ்சியத் தொகுதி தொடர்பில் இந்தியாவுடன் எவ் வித ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்படாது என்ற அரசாங் கத்தின் உறுதிமொழி மீறப்ப டின், எதிர்வரும் வாரத்தில் தொழிற் சங்க போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக

# “வெட்கப்படுகிறேன்”



நாங்கள் ஒரு தனி நாட்டுக்காக போரா டிய இனம். இன்று நாங்கள் எவ்வாறு செயற்படுகின்றோம்? அந்தப்போராட்டத்தை நடத்திய எங்களுக்கு அதனது இலக்கை அடைவதற்கான தகுதி இருக்கிறதா என்று வெட்கத்துடன் நினைக்கத் தோன்றுகிறது. காரணம் எங்களுக்கு அந்த ஓர்மம் வரவேண்டும். இது எங்களுடைய நாடு, எங்களுடைய மக்கள்,எங்களுடைய சகோதரர்கள் ஆகவே இதை நாங்கள் முன்னுக்கு கொண்டுவரவேண்டும் என்கிற அவா நம 06

## அமைச்சுக்களுக்கு பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பிலுள்ள அமைச்சுக் களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மா னித்துள்ளது. சமகால அரசாங்கத் துக்கு எதிர்ப்பு வெளியிடும் ஆர்ப் பாட்டக்காரர்களினால் பாதிப்பு ஏற்படுத்த கூடும் என அடையாளம் காணப்பட்டுள்ள அமைச்சுக ளுக்கு இவ்வாறு பாதுகாப்பு 06

## அமைச்சர்கள் உட்பட 18 பேர் அரசிலிருந்து விலகுவர்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இராஜாங்க மற்றும் பிரதியமைச்சர் 18 பேர், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம், கூட்டிணைந்த அரசாங்கத்திலிருந்து விலகவுள்ளதாக, நில இராஜாங்க அமைச்சர் டீ.பி. ஏக்கநாயக்க, நேற்று தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முடியவுள்ள தாகவும், எனவே, கூட்டாட்சி அரசாங்கத் திலிருந்து விலகுவதற்கு, இந்த 18 பேரும் தீர்மானித் துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதன்பின்னர், 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் வரும்வரை, இவர்கள் நாடா ளுமன்றத்தில் சுதந்திர உறுப்பினர்களாகசெயற் படுவர் என்றும் 06

## குடத்தனையில் சிக்கியது ஹன்டர்
# பொலிஸார் துப்பாக்கிச் சூடு!



வடமராட்சிப் பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டுவந்த ஹன்டர் வாகனம் ஒன்றை துப்பாக்கிச் சூடு நடத்தி பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இதேவேளை ஹன்ரரில் பயணித்தவர்கள் தப்பிச் சென்றுள் ளனர். வல்லிபுரம் - குடத்தனைப் பகுதியில் இன்று அதிகாலை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

குடத்தனைப் பகுதியில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வு நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் மக்களின் முறைப்பாட் டினையடுத்து பருத்தித்துறைப் பொலிஸார் நேற்று 06

## கொழும்பைத் தாக்க ஐ.எஸ். திட்டம்

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரத்தின் மீது தாக்குதல் நடத்த, ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புத் திட்டமிட் டுள்ளதாக அமெரிக்க புலனாய்வுப் பிரிவு எச்ச ரிக்கை விடுத்துள்ளது.

இரத்மலானை விமான நிலையத்தில் விமானம் ஒன்றைக் கடத்திச் சென்று இந்தத் தாக்குதலை மேற்கொள் வதே ஐ.எஸ் அமைப்பின் திட்டம் என்றும் , இதற் காக ஆயத்தங்களை அந்த அமைப்பி னைச் சேர்ந்த சிலர் 06

# பூநகரியில் புலிகள்?

படப்பிடிப்பால் பரபரப்பு



பூநகரிப் பகுதியில் கடந்த இரண்டு நாட்களாக மீண்டும் புலிகள் வந்து விட்டார்கள் என்று பெரும் பரபரப்பு ஏற்பட்டது.இதனையடுத்து ஒரு சிலர் அவ்வாறு விடுதலைப் புலிகள் நடமாடுவதாகக் கூறப்படும் 06

## மக்கள் பிரதிநிகள் ஒத்துழைக்க வேண்டும்

உத்தேச புதிய அரசி யல் யாப்பு மக்களுக்கும், அரசாங்கத்துக்கும் சமூக ஒப்பந்தங்களில் கூடிய தான அரசியல் யாப்பாக எதிர்காலத்தில் திகழும் என அரசியலமைப்பு சபையின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி லால் விஜய நாயக்க தெரி வித்தார். அதற்காக பூரண ஒத்துழைப்பினையும் மக் கள் பிரதி நிதிகள் வழங்க முன் வரவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இலங்கையின் அரசியல மைப்புச் சபை செயலகத் தின் ஏற்பாட்டில் உத்தேச அரசியலமைப்பு சீர்திருத் தம் தொடர்பாக குடியி யல் சமூக, மற்றும் மத தலை வர்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் மக்கள் பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தும் மக்கள் சந்திப்பு ஒன்று நேற்று யாழ் மாவட்ட செயலகத் தின் கேட்போர் கூடத்தில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் 06

# மடு தேவாலய பெருவிழா



மன்னார் மடு அன்னையின் ஆடி மாத திருவிழா திருப்பலி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.15 மணிக்கு தமிழ், சிங்கள மொழிகளில் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலர் மேதகு ஆயர் யோசப் கிங்சிலி சுவம் பிள்ளை ஆண்டகை தலைமையில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயல் இம்மானுவல், அனுராதபுரம் மறைமாவட்ட ஆயர் நோபட் அன்ராடி ஆகியோர் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்க வுள்ளனர்.

மடுத்திருத்தலத்தின் ஆடி மாத திருவிழாவை முன்னிட்டு கடந்த 23 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை மடு ஆலயத்தில் மடு ஆலய பரிபாலகர் அருட்தந்தை எஸ்.எமிலியா னுஸ்பிள்ளை அடிகளார் தலைமையில் பாப்பரசரின் கொடியும் மடு அன்னையின் கொடியும் ஏற்றிவைக்கப்பட் டது.

இதைத் தொடர்ந்து கடந்த ஒன்பது தினங்கள் மாலையில் திருச்செபமாலையுடன் நவ நாள் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப் பட்டது. (உ-02)

# மரபணு தொழில்நுட்பம் மூலம் புற்று நோயாளர்களுக்கு சிகிச்சை



புற்று நோயாளர்களுக்கு மரபணு தொழில்நுட்பம் மூலம் சிகிச்சை வழங்கு வதற்காக "கைருடா" எனும் மருத்துவ வகை அமெரிக்காவில் தயாரிக்கப்பட் டுள்ளதாக சுகாதார அமைச்சர் டொக் டர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் இது தொடர் பாக மேலும் தெரிவிக்கையில் "தொற்றா நோய்களின் பட்டியலில் புற்று நோய் இரண்டாம் இடத்திலிருக்கின்றது. இன் னும் சில காலம் சென்றால் இந்நோய் முதல் இடத்தைப் பிடிக்கலாம். அமெ ரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்ட மர பணு தொழில்நுட்ப சிகிச்சையைப் பயன்படுத்தி புற்றுநோயாளர்கள் குண மடைகிறார்கள். இவ்வாறான மருத்துவ ஆராய்ச்சியை கற்கும் விசேட வைத்திய நிபுணர்களை நாம் உருவாக்க வேண் டும்" என்று தெரிவித்தார். (உ)

# அம்பாந்தோட்டை சீனாவுக்கு! முட்டுக்கட்டை அகன்றது




அம்பாந்தோட்டை துறைமுகத்தையும் அதனுடன் இணைந்த 15 ஆயிரம் ஏக்கர் காணி யில் கைத்தொழில் பூங்காவையும் அமைப்ப தற்கு, இலங்கை அரசாங்கம் இரண்டு சீன நிறுவனங்களுடன் உடன்பாடு செய்து கொள்வ தற்கு எதிராக, தாக்கல் செய்யப்பட்ட அடிப் படை உரிமை மீறல் மனுவை இலங்கை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

சீன நிறுவனங்களுடன், கட்டமைப்பு உடன்பாட்டுக்கு செல்வதற்குத் தடை விதிக்கு மாறு கோரி, கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மூன்று பேர் கொண்ட உயர் நீதிமன்ற நீதிய ரசர்கள் குழாம் இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்டிருந்தது. சட்டமா அதிபர் திணைக்களத்தின் வாதத்தை அடுத்து இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது. (உ)

# மீள்குடியேற்ற கலந்துரையாடல்





யாழ் முஸ்லிம்களின் மீள்குடியேற்றத் தில் ஏற்பட்டுள்ள தடைகளுக்கான தீர்வை பெற்றுக் கொடுப்பது தொடர்பான விஷேட உயர்மட்ட கூட்டம் நேற்று யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத் தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரிஷாட் பதியு தீன், பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம் ஏ சுமந்திரன், மாகாண சபை உறுப்பினர்களான ஜயூப் அஸ்மின் இமானுவேல், ஆர்னோல்ட் மற்றும் வடக்கு மீள்குடியேற்ற செயலணி யின் பணிப்பாளர் யாசீன் உட்பட அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (உ)

# கீதா மட்டுமே இரட்டைக் குடியுரிமை



இரட்டைக் குடியுரிமை கொண்ட ஒரே நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க மட்டு மேதான் என குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள் ளார்.

வேறு நாடாளுமன்ற உறுப்பி னர்கள் எவரும் இரட்டைக் குடியு ரிமை கொண்டுள்ளதாக இதுவரை யில் தெரியவரவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இந்த விடயங்கள் தொடர்பில் விரிவான விசாரணை கள் நடத்தப்படவுள்ளன. நாடாளு மன்ற உறுப்பினரான கீதா குமார சிங்க சுவிட்சர்லாந்து குடியுரிமை யையும் பெற்றுக் கொண்டுள்ளார் என குற்றம் சுமத்தி வழக்குத் தொட ரப்பட்டிருந்தது.

இரட்டைக்குடியுரிமை கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பற் றிய விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகக் குறித்த பேச்சாளர் தெரிவித்துள் ளார். (உ)

# இரவுப் போட்டிகள்

அரியாலை சன சமூக நிலையத்தின் கரப்பந்தாட்டத் தொடரில் இன்று இரவு நான்கு போட்டிகள் நடைபெறவுள்ளன.

இரவு 6.00 மணிக்கு நடைபெறும் போட்டியில் புத்தூர் கலைமதியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட் டுக்கழகம் மோதவுள்ளது.

பின்னர் 7 மணிக்கு நடைபெறும் போட்டியில் பளை மத்தியை எதிர்த்து மூளாய் விக்டோரி விளையாட்டுக்கழகம் மோதும். இதில் வெற்றிபெறும் அணி 8.45இற்கு அச்சுவேலி யூத்துடன் விளை யாடும்.

இதற்கு முன்னர் 8 மணிக்கு நடைபெ றும் போட்டியில் கெருடாவில் அண்ணா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் மோதும். (ஐ)

# ஜனாதிபதியின் செயலாளராகும் கிழக்கு மாகாண ஆளுநர்




ஜனாதிபதியின் செயலாளர் பதவிக்கு ஒஸ்டின் பெர் னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

சிரேஷ்ட நிர்வாக அதிகாரியான ஒஸ்டின் பெர்னாண்டோ இவ்வாறு ஜனாதிபதியின் செயலாளராக நியமிக்கப்பட்டுள் ளதாகக் கூறப்படுகிறது.

இதுவரை காலமும் ஜனாதிபதியின் செயலாளராக கடமையாற்றி வந்த பீ.பி.அபயக்கோன் தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, தனிப்பட்ட காரணங்களினால் அவர் இவ்வாறு பதவியை ராஜினாமா செய்திருந்தார் என தெரி விக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

# சுயமரியாதையுடன் வாழக்கூடிய தீர்வு கிடைக்க வேண்டும்



அனைத்து இலங்கையர்க ளும் சுயமரியாதையுடன் வாழக் கூடிய தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்படவேண்டுமென இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் ஷெல்லி வைற்றிங் தெரிவித்துள்ளார்.

150ஆம் கனேடிய தின நிகழ்வுகளை முன்னிட்டு வெளி யிட்டுள்ள விசேட அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள் ளார். மத, இன, பால் நிலை அல் லது மொழி அடிப்படையில் இலங்கையில் எவரும் ஒடுக்கு முறைக்கு உட்படுத்தப்படுவதனை ஏற்றுக்கொள்ளமுடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். இலங் கைக்கும் கனடாவுக்கும் இடை யில் மிக நீண்ட கால உறவுகள் நீடித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

# மாணவர் குழுக்கள் மோதல் மூவர் படுகாயம்

ஜயவர்தனபுர பல்க லைக்கழகத்தில் மாணவ குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் காரண மாக மூவர் படுகாயம் அடைந்துள்ளனர்.

ஜயவர்தனபுர பல்க லைக்கழகத்தின் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மாணவர்கள் மற் றும் மேலும் சில மாணவர் களுக்கு இடையே மோதல் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த மோதலில் காயம டைந்த 3 மாணவர்கள் களுபோவில வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். இன்று அதி காலை 12.30 மணியளவில் இந்த மோதல் இடம்பெற் றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ)


மாதாந்தம் ஒரு இலட்சம் வரை சம்பாதிக்கலாம்

விளம்பரத் துறையில் அனுபவம் / ஆர்வம் உள்ளவரா நீங்கள்? அப்படியாயின் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

முழு நேரமாகவோ / பகுதி நேரமாகவோ உங்கள் வசதிக்கேற்ப பணி புரியலாம்

தொடர்புகளுக்கு : 021 300 4848



# "என்னைப் போட்டோ எடுங்கள்"

## நெகிழ வைக்கும் புகைப்படம்

பிரிட்டனைச் சேர்ந்த ப்ரெய்டன் என்னும் சிறுவனின் கடைசிக் கணப் புகைப்படங்கள் வெளியாகி, பார்ப்போரைக் கவலையில் ஆழ்த்தி வருகின்றன. ப்ரெய்டனுக்கு அவனது இரண்டாவது வயதில் புற்றுநோய் ஏற்பட்டுள்ளது. பல்வேறு மருத்துவ சிகிச்சைகள் மேற்கொண்ட போதும் அவை ஏதும் பயனளிக்கவில்லை. இந்த நிலையில் ஒருநாள் அவன் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த போது திடீரென வலியால் முனகியுள்ளான். புற்றுநோய் வந்த பின்னர் ப்ரெய்டன் பேசும் சக்தியை இழந்திருந்தான். ஆனால் அன்று அவன் முனகியதை அடுத்து அவன் தந்தை மார்பில் தூக்கி வைத்திருந்த போது " என்னைப் புகைப்படம் எடுங்கள்" என உரக்கக் கத்தியுள்ளான் ப்ரெய்டன். அவனது தாய் புகைப்படம் எடுத்த சில நிமிடங்களில், தந்தையின் மார்பிலேயே ப்ரெய்டன் கண்ணை மூடி உயிரை விட்டுள்ளான். புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த ப்ரெய்டனின் கடைசி நேரப் புகைப்படத்தை பெற்றோர் வெளியிட்டுள்ளனர்.(இ)




# மசூதியை தகர்க்க வந்தவர் கைது!

பிரான்ஸில் கார் மூலம் மோதி மசூதியைத் தகர்க்க முயற்சி செய்த சாரதியைப் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.
பரிஸின் தென்கிழக்கு புறநகரில் உள்ள கிரீடியர் நகரிலேயே இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.
அந்த நகரில் உள்ள மசூதிக்கு நேற்றிரவு வேகமாக வந்த கார் ஒன்று, மசூதியின் தூண் மற்றும் தடுப்புச் சுவரில் மோதி நின்றது. இதனால் எவ்வித அசம்பாவிதமும் ஏற்பட வில்லை, உடனடியாக பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அந்தக் காரில் வந்த சாரதியைக் கைது செய்தனர். மசூதியை இடித்து அழிக்கவே வந்ததாக அவர் ஒப்புக் கொண்டுள்ளார். (இ)

# கத்தியுடன் வந்தவருக்கு கட்டிப்பிடி வைத்தியம்

தாய்லாந்தில் கத்தியுடன் வந்து பொலிஸ் நிலையத்துக்குள் மிரட்டிய நபரை, கட்டடிபிடித்து சமாதனம் செய்த பொலிஸாரின் செயலைப் பலரும் பாராட்டி வருகின்றனர்.
தாய்லாந்தின் ஹவாயி கவாங் பகுதியில் பொலிஸ் நிலையத்துக்கு சில தினங்களுக்கு முன்னர் வாலிபர் ஒருவர் கையில் கத்தியுடன் நுழைந்துள்ளார். அவர் கத்தியைக் காட்டி அங்கிருந்த பொலிஸாரை மிரட்டி யுள்ளார். இதன்போது அங்கிருந்த பொலிஸாரில் ஒருவர் தனது இரண்டு கைகளையும் நீட்டி, இளைஞரிடம் மெதுவாகப் பேச்சு கொடுத்து, அவரிடம் இருந்த கத்தியைக் கைப்பற்றினார். அப்போது இளைஞர் திடீரென்று அழத் தொடங்கினார். உடனே பொலிஸ் அதிகாரி இளைஞனைக் கட்டிப்பிடித்து ஆறுதல் கூறினார். இளைஞனிடமிருந்த 'கிட்டார்' திருடு போன மன அழுத்தம் காரணமாகவே அவன் இவ்வாறு நடந்து கொண்டதை அறிந்த பொலிஸ் அதிகாரி, அவனுக்கு தன்னிடமிருந்த கிட்டாரை பரிசளித்துள்ளார். (இ)

# மீண்டும் வைரஸ் கணினிகள் பாதிப்பு



உலகம் முழுவதும் புதிய இணைய வைரஸ் ஒன்று கணினிகளைத் தாக்கி வருவதாக ஐரோப்பிய யூனியனின் பொலிஸ் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.
கடந்த சில வாரங்களுக்கு முன்னர்மின்னஞ்சல் மூலம் ஊடுருவி, கணினிகளின் செயற்பாட்டை நிறுத்திய ரான்சம்வேரை விட சக்தி வாய்ந்ததாக இந்தப் புதிய வைரஸ் உள்ளது. இது பல பாது காப்புக் கட்டமைப் புகளையும் மீறி, கணினி களைத் தாக்கி வருவ தாகக்கூறப் படுகின்றது.
சரக்கு கப்பல் போக்குவரத்து நிறுவனமான மேர்ஸ்க், கொரியர் நிறுவனமான பெடரல் எக்ஸ்பிரஸ், மருந்து நிறுவனமான மெர்க் ஆகியவற்றில் இந்த வைரஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (இ)


# நள்ளிரவில் முதல் 'ஒரே நாடு ஒரே வரி'

"ஒரே நாடு ஒரே வரி" என்ற தொனிப்பொருளில் இந்தியா முழுதும் ஒரே வகையான வரிவிதிப்பைச் செய்யும் வகையிலான ஜீ.எஸ்.டி வரி(சரக்கு, சேவை வரி) நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.
சரக்கு, சேவை வரியை அறிமுகம் செய்யும் விழா இந்திய நாடாளுமன்ற மைய மண்டபத்தில் நேற்று இரவு நடைபெற்றது. விழாவில் கலந்துகொள்வதற்காக இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி இரவு 10.55 மணிக்கு நாடாளுமன்றத்துக்கு வந்தார். 11 மணிக்கு விழா தொடங்கியது. முதலில் நிதியமைச்சர் அருண் ஜெட்லி, சரக்கு, சேவை வரி பற்றி விளக்கிப் பேசினார். அதன்பிறகு பிரதமர் நரேந்திர மோடியும், 11.45 மணிக்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி உரையாற்றினர். சரியாக நள்ளிரவு 12 மணி ஆனதும், மணி அடித்து சரக்கு, சேவை வரி விதிப்பு



முறை தொடங்கிவைக்கப்பட்டது.இதன் மூலம் அத்தியாவசியப் பொருட்களின் விலை குறையும். அதேவேளை ஆடம்பரப் பொருட்களின் விலை உயரவுள்ளது. (இ)

# இதுதான் பதிலடி!



இந்திய, சீன எல்லையில் தற்போது பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.
இந்த நிலையில், சீன இராணுவச் செய்திதொடர்பாளர் அளித்த பேட்டியில், 1962ஆம் ஆண்டு இரு நாடுகள் இடையே போர் நடந்ததை சுட்டிக்காட்டி, "இந்திய இராணுவம் வரலாற்றில் இருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்" என்று கூறியிருந்தார்.
இந்த நிலையில் மத்திய நிதி, பாதுகாப்பு அமைச்சர் அருண் ஜெட்லி தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்கேற்று பேசியபோது, "அவர்கள் நமக்கு நினைவூட்ட விரும்பினால், அவர்களுக்கு ஒன்றுதான் என்னால் சொல்ல முடியும். அதாவது 1962 இல் இருந்த அன்றைய இந்தியாவின் நிலையும், இன்றைய 2017 ஆம் ஆண்டின் இந்தியாவின் நிலையும் வேறானவை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்" என்று பதிலடி கொடுத்துப் பேசியுள்ளார். (இ)

# லெபனானில் நேற்று தற்கொலைத் தாக்குதல்



லெபனானில் உள்ள அகதிமுகாம் அருகே நேற்று இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.
சிரியா எல்லையொட்டிய அர்ஸல் நகரில் உள்ள அகதிகள் முகாமுக்கு அருகே லெபனான் இராணுவவீரர்கள் வழக்கமான ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு வந்த தற்கொலையாளிகள் 4 பேர், தங்களது உடல்களில் கட்டிக் கொண்டு வந்திருந்த வெடி குண்டுகளை வெடிக்க செய்தனர். இதில் அவர்கள் 4 பேரும் உடல் சிதறிப் பலியாகினர். ஆயினும் படையினர் சிதறி ஓடியதால் அவர்கள் தரப்பில் உயிரிழப்புத் தவிர்க்கப் பட்டது. மூன்று இராணுவத்தினருக்கு காயங்கள் ஏற்பட் டன.(இ)

# ஓரினத் திருமணத்துக்கு ஜேர்மனியில் அனுமதி

ஜேர்மனியில் ஓரினச்சேர்க்கைத் திருமணத்தை சட்டபூர்வமாக்குவது தொடர்பான வாக்கெடுப்பு வெற்றி பெற்றுள்ளது. இதனால் ஓரினத் திருமணம் விரைவில் அங்கு சட்டபூர்வமாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
ஜேர்மனி நாடாளுமன்றத்தில் ஓரினச்சேர்க்கை திருமணத்தை சட்டப்பூர்வமாக்குவது தொடர்பான வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில் பெரும்பான்மையானவர்கள் ஆதரவாகவே வாக்களித்தனர். தொடர்ந்து குறித்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.
இதன்படி ஓரினச்சேர்க்கை திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகள் குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்க்கவும் அனுமதி வழங்கப் பட்டுள்ளது. (இ)



### நவிண்டில் கலைமதி உதைபந்தாட்டத் தொடர்:

# குப்பிளான் குறிஞ்சிக்குமரனை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது றோயல்



வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தி வரும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற காலிறுதியாட்டத்தில் வெற்றி பெற்ற றோயல் அணி அரையிறுதிக்கு முன்னேறியது.

அணிக்கு 11 பேர் கொண்டதாக நடைபெறும் இவ்வுதைபந்தாட்டத் தொடரில் நேற்றைய தினம் இரவு கஜந்தன் தலைமையிலான ஊரெழு றோயல் அணி, குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியுடன் மோதியது.

ஆட்டத்தின் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஊரெழு றோயல் அணி, 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று முதல் அணியாக அரையிறுதிக்கு முன்னேறியது. றோயல் அணி சார்பாபக கஜகோபன், சயந்தன் ஆகியோர் தலா ஒரு கோல் போட்டனர். (ஐ)

# இந்திய அணி அசத்தல்

மேற்கிந்தியத் தீவுகள்அணிக்கெதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 93 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இந்திய அணி, மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையில் 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் முதல் போட்டி மழையால் பாதித்தது. இரண்டாவது போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது.

இந்நிலையில் நேற்று நடைபெற்ற மூன்றாவது போட்டியில் முதலில் துடுபபெடுத்தாடிய இந்திய அணி, 50 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 251 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, 38.1 ஓவர்களில் 158 ஓட்டங்களுள் சுருண்டது. இதனால் இந்தியஅ ணி 93 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக ஆட்டமிழக்காது 78 ஓட்டங்களைக் குவித்த டோனி தெரிவுசெய்யப்பட்டார்.

மேலும் இப்போட்டியின் மூலம் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அதிக ஓட்டங்களைக் குவித்த விக்கெட் காப்பாளர்கள் வரிசையில் அவுஸ்திரேலியாவின் அடம் கில்கிறிஸ்டை (9410 ஓட்டங்கள்) முந்தி, டோனி 9442 ஓட்டங்களைச் சேர்த்து இரண்டாவது இடம் பிடித்தார்.

அதுமாத்திரமின்றி சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 200 சிக்ஸர்கள் அடித்த முதல் இந்திய வீரர் என்ற சாதனையை மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான போட்டியில் டோனி படைத்தார்.



# அரையிறுதியில் ஆவரங்கால் இந்து இளைஞர்




அரியாலை சனசமூக நிலையத்தின் 68ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கரபந்தாட்டத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற காலிறுதிப் போட்டி ஒன்றில் வெற்றிபெற்றதன் மூலம் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி அரையிறுதிக்கு முன்னேறியது.

இந்தப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி, புத்தூர் வளர்மதி அணியை எதிர்த்து காலிறுதியில் விளையாடியது.

இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி, 26:24, 19:25, 25:20 என்ற புள்ளிகளடிப்படையில் புத்தூர் வளர்மதியை வென்று அரையிறுதிக்குத் தெரிவாகியது.

இந்த அரையிறுதியாட்டம் நாளையதினமே நடைபெறவிருந்தது. எனினும் இரு அணிகளும் ஏற்கனவே வெவ்வேறு போட்டிகளில் பங்கேற்க மைதானத்துக்கு வருகை தந்திருந்தமையால், அவற்றின் சம்மதத்துடன் இந்தக் காலிறுதியாட்டம் நேற்றையதினமே நடைபெற்றது. (ஐ)

# அரியாலை ச.ச.நிலைய கரப்பந்தாட்ட முடிவுகள்

அரியாலை சனசமூக நிலையத்தின் கரபந்தாட்டத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற போட்டிகளில், கச்சாய் வொலிகிங்ஸ் மற்றும் புத்தூர் வளர்மதி அணிகள் வெற்றிபெற்றன.

முதலாவதாக நடைபெற்ற போட்டி ஒன்றில் கச்சாய் வொலிகிங்ஸ் அணி, புத்தூர் சரஸ்வதி அணியை எதிர்த்து விளையாடியது. இதில் வொலிகிங்ஸ் அணி, 21:25, 25:16, 25:17 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றிபெற்றது.

பின்னர் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் புத்தூர் வளர்மதி அணி சிறுப்பிட்டி கலையொளியை எதிர்கொண்டது. இதில் புத்தூர் வளர்மதி அணி 25:22, 25:15 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றிபெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து நீர்வேலி ஐக்கிய அணி மோதியது. இதில் இந்து இளைஞர் அணி, 15:25, 25:22, 25:16 என்ற புள்ளிக் கணக்கில் வென்றது. (ஐ)

# மஞ்சிமாவை மடக்கிய அனுருத்தின் உறவினர்



இளம் இசைப்புயல் அனிருத் ஏற்கனவே ஒருசில நடிகைகளுடன் கிசுகிசுக்கப்பட்டு தற்போதுதான் அவருக்கு வீட்டில் பெண் பார்த்து வருகின்றனர் எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில் அனிருத்தின் உறவினரும், "வேலையில்லாப் பட்டதாரி" படத்தில் தனுஷின் தம்பியாக நடித்தவருமான ரிஷிகேஷ், நடிகை மஞ்சிமா மோகனை காதலித்து வருகிறார் எனவும், இருவரும் இணைந்து சென்னையில் உள்ள 'கொபி ஷொப்'களில் தென்படுகின்றனர் எனவும் கூறப்படுகிறது.

ரிஷிகேஷின் காதல் வலையில் மஞ்சிமா விழுந்துவிட்டாரா? அவரது வீட்டுக்கு மருமகளாகப் போவாரா? அல்லது இவர்கள் இருவரும் வெறும் நட்புடன் மட்டுமே பழகுகிறார்களா? என்பது விரைவில் தெரியவரும். (ஒ)

# மீண்டும் புலிப்படம்

'நீலம்' என்ற தமிழ்த் திரைப் படம், 2012இல் தொடங்கப்பட்டது. இந்தப் படத்தின் கதைக்கரு புலிப்போராளிகளின் வாழ்க்கையைத் தழுவியது.

இலங்கையில் நடந்த இனப்படு கொலையை மையமாக வைத்து திரைக்கதை உருவாக்கப்பட்டது. இதனால் எழுந்த சர்ச்சைக்குப்பின் 2013இல் படம் நிறுத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில் மீண்டும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு மீண்டும் தொடங்கியிருக்கிறது. படத்தை தயாரித்து இயக்குகிறார் வெங்கடேஷ் குமார். (ஐ)



# கூகுளின் புதிய படைப்பு

கூகுள் நிறுவனத்தின் புதிய முயற்சியாக யூடியூப்புக்கான Uptime அப்பிளிக்கேஷன் உருவாக்கப்பட்டுள்ளது.



யூடியூப்பில் வீடியோக்களை ஒருவர் பார்த்த பின்னர் அதனை ஷேர் செய்து நண்பர்களையும் பார்க்கச் செய்ய முடியும்.

அத்துடன் அவர்களின் கொமெண்ட்களை கேட்கவும் முடியும். ஆனால் இதனைச் செய்வதற்கு குறித்த அளவு நேரம் எடுக்கும்.

இதனைத் தவிர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட அப்பிளிக்கேஷனே Uptime ஆகும்.


இதனூடாக அனைத்து நண்பர்களும் ஒரே நேரத்தில் குறித்த ஒரு வீடியோவை தமது மொபைல் சாதனங்கள் ஊடாக பார்த்து மகிழ முடியும்.

அத்துடன் உடனுக்குடன் அவர்களின் அபிப்பிராயங்களையும் கொமெண்ட் ஊடாக கேட்க முடியும்.

இந்த அப்பிளிக்கேஷன் முதன் முதல் டெவலப்பர்களுக்காக அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில் இதன் பீட்டா பதிப்பு அனைத்து பயனர்களும் பயன்படுத்தக் கூடிய வகையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

மேலும் iOS சாதனங்களிலேயே தற்போது பயன்படுத்த முடியும். Android சாதனங்களுக்கு விரைவில் அறிமுகம் செய்யப்படவுள்ளது. (ஒ)

# விக்ரமாதித்தன் - வேதாளம் கதையே 'விக்ரம் வேதா'



புஷ்கர் காயத்ரி இயக்கத்தில் மாதவன், விஜய்சேதுபதி, வரலட்சுமி நடிக்கும் படம் 'விக்ரம் வேதா'. இதன் அறிமுக நிகழ்ச்சி சென்னையில் நடந்தது. இதில் பேசிய இயக்குநர் புஷ்கர் காயத்ரி கூறும்போது:

"விக்ரமாதித்தன் - வேதாளம் கதையை கருவாக்கி இந்த படத்தை எடுத்துள்ளோம். இதில் மாதவன் பொலிஸாகவும், விஜய்சேதுபதி தாதாவாகவும் நடித்திருக்கிறார்கள். மாதவன் தாடி வைத்த கெட் அப்பில் வருகிறார்" என்றார்.

# ஏடுகள் வாசித்தல் பயிற்சிப்பட்டறை




வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் சித்தமருத்துவத்தில் பயன்படுத்தப்படும் ஏடுகள் வாசிப்பதற்கான பயிற்சிப் பட்டறை அண்மையில் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் சித்தமருத்துவ பீடத்தில் நடைபெற்றது. சுதேச மருத்துவ திணைக் களத்தின் ஒழுங்குபடுத்தலுடன் நடைபெற்ற இரண்டுவார கால பயிற் சிப்பட்டறையில் சித்த மருத்துவ துறை மாணவர்கள், சுதேச மருத்துவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்தியாவின் தமிழ் நாட்டிலிருந்து ஏடுவாசிப்பதில் சிறப்புத்தேர்ச்சியுடைய பயிற்றுநர்கள் வரவழைக்கப்பட்டு இந்தப் பயிற்சிப்பட்டறை வழங்கப்பட்டது. இறுதிநாள் நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் கலந்துகொண்டு பயிற்றுநர்களுக்கு கௌரவிப்பை வழங்கி வைத்தார். (உ)

# முறைப்பாடு

மாலம்பே தனியார் மருத்துவ கல்லூரியின் தலைவர் டொக்டர் நெவில் பெர்னாண்டோவுக்கு எதிராக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முறைப்பாடு செய்யவுள்ளது. எதிர்வரும் திங்கட்கிழமை பொலிஸ் மா அதிபரிடம் இந்தப் முறைப்பாட்டைச் செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மருத்துவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் நெவில் பெர்னாண்டோ கருத்து வெளியிட்டு வருவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. (உ)

# இன்றைய கருத்தோவியம்




# நியமனக் கடிதங்கள் ஜூலை 5 இல்

சப்ரகமுவ மாகாணசபையில் புதிய ஆசிரியர்களுக்கான நியமனக்கடிதங்கள் எதிர்வரும் 5ஆம் திகதி வழங்கப்படவுள்ளதாக சப்ரகமுவ மாகாண கல்வி செயலாளர் மகிந்த எஸ்.வீரசூரிய தெரிவித்துள்ளார். புதிதாக 400 ஆசிரியர்கள் இணைத்துக்கொள்ளப் படவுள்ளனர். தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களின் விபரம் www.moe.sg.gov.lk என்ற இணையத்தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். தபால் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தினால் அழைப்புக் கடிதம் கிடைக்காதோர் எதிர்வரும் 5ஆம் திகதி இரத்தினபுரி மத்திய நூலகத்துக்கு வருகை தருமாறு அவர் கேட்டுள்ளார். (உ)





இலங்கையில் காலநிலை பற்றிய தகவல்களை தரக்கூடிய ராடர் வலையமைப்பை நிறுவுவதற்கு, ஜப்பான் 3,422 ரூபா நிதியுதவியை வழங்கவுள்ளது. இதற்கான உடன்பாடு நேற்று கொழும்பில் கையெழுத்திடப்பட்டது. இலங்கையின் நிதியமைச்சில் நேற்று நடந்த நிகழ்வில், ஜப்பானியத் தூதுவர் கெனிச்சி சுகநுமாவும், நிதியமைச்சின் செயலரும் இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டனர். இந்த உதவியின் கீழ் பொத்துவிலிலும், புத்தளத்திலும் இரண்டு ராடர் நிலையங்கள் அமைக்கப்படும். இங்கு டொப்ளர் ராடர்கள் பொருத்தப்பட்டு துல்லியமான கால நிலைத் தகவல்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அத்துடன் இந்த ராடர் நிலையங்களுக்கும், வளிமண்டலவியல் திணைக் களத்துக்கும் தேவையான தொழில்நுட்ப உதவியும், ஜப்பானின் உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப் படவுள்ளது. (உ)

# நாளை மின்தடை

மின்மார்க்கங்களில் திருத்த வேலைகள் இடம்பெறவுள்ளதால் நாளை ஞாயிறு காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை யாழ். மாவட்டத்தின் பின்வரும் பிரதேசங்களில் மின்தடை நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக மின்சார சபை அறிவித்துள்ளது.

சங்கத்தானை, மீசாலை, வங்களாவீதி, அல்லாரை, வெள்ளாம்பொக்கட்டி, கெற்பெலி, கச்சாய், பாலாவி, கச்சாய் துறைமுகம், அம்மன் கோவிலடி, புத்தூர் சந்தி, இராமாவில், கொடிகாமம், நாவலடி, வறணி, கரம்பைக்குறிச்சி, வாழைத்தோட்டம், வேம்பிராய், மந்துவில், தாவழை,இயற்றாழை, கலைவாணி, மிருசுவில் வடக்கு, சுட்டிபுரம், குளப்பிட்டி, ஆனைக் கோட்டைசந்தி,யாழ் வீதி மானிப்பாய், ஆறுகால் மடம், கூளாவடி, ஆனைக்கோட்டை, நவாலி, மூத்தவிநாயகர் கோவிலடி, சென் பீற்றர்ஸ் தேவாலயம், அரசடி, அட்டகிரி, வேலக்கை, குளப்பிட்டி ஆனைக்கோட்டைவீதி, பள்ளத்தடி, சாவற்காட்டுச் சந்தி, வராகிஅம்மன் கோவிலடி, காக்கைதீவு, தலங்காவில், திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தி, சிவன் அம்மன் வீதி,கந்தர்மடம், அன்னசத்திரச் சந்தி, இலுப்பையடி சந்தி, பருத்தித்துறை வீதியில் நாகவிகாரையில் இருந்து பாரதியார் சிலை வரை, விக்ரோறியா வீதி, மின்சார நிலைய வீதியில் ஒரு பகுதி, புகையிரத நிலையப் பிரதேசம், மார்ட்டின் வீதி, யாழ் 2ஆம் 3ஆம் 4ஆம் குறுக்கு தெருக்கள், ஸ்ரான்லி வீதியில் புகையிரதக் கடவையிலிருந்து இராசாவின் தோட்ட வீதி வரை, அம்பலவாணர் வீதி, அன்ன சத்திர வீதி, ஆஸ்பத் திரி வீதி வேம்படி சந்தியிலிருந்து மார்டின்வீதி வரை, ஸ்ரான்லி வீதியில் ஆரியகுளத்திலிருந்து முட்டாசுக்கடை சந்தி வரை,கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதி, மணிக்கூட்டு வீதியில் ஒரு பகுதி, நொதேர்ண் சென்றல் கொஸ்பிற்றல், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆண்கள் விடுதி, டம்றோ பலாலி வீதி,ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், பீப்பிள் லீசிங் அன் பினான்ஸ் கம் பனிஸ்ரான்லி வீதி, AVNOR பிறைவேற் லிமிற் ரெட், மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி, யாழ்.புகையிரத நிலையம், கிறீன் கிறாஸ் விடுதி, சிறிநதியா நகை மாளிகை, ராஜா திரையரங்கு, LOLC, ஞானம்ஸ் விடுதி.

# இலங்கைக்கு உதவுவதில் உறுதியாக உள்ளோம்



இலங்கை மக்களின் நலன் மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்திக்காக தொடர்ந்தும் செயற்படுவதில் இந்தியா உறுதி பூண்டுள்ளது என்று இலங்கைக்கான இந்திய தூதுவர் தரன்ஜித் சிங் சந்து தெரிவித்துள்ளார். கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள, யாழ். பல்கலைக்கழக பொறியியல் மற்றும் விவசாய பீடங்களுக்கான புதிய கட்டடத் தொகுதியைத் திறந்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். இந்தியாவின் 600 மில்லியன் ரூபா உதவியின் கீழ் கட்டப்பட்ட இந்தக் கட்டடத் தொகுதிகளை சிறிலங்காவின் உயர்கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, மற்றும் வட மாகாண ஆளுனர் ரெஜினோல்ட் குரே ஆகியோருடன் இணைந்து, இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் உரையாற்றிய இந்திய தூதுவர், பொருளாதார அபிவிருத்திக்கு விவசாயத்துறையும் பொறியியல் துறையும் மிக முக்கியமானவை என்றும் குறிப்பிட்டார். (உ)

# கலைமுகம் வெளியானது




கலைமுகம்' கலை, இலக்கிய சஞ்சிகையின் 62 ஆவது இதழ் வெளிவந்துள்ளது. திருமறைக் கலாமன்றத்தினால் வெளியிடப்படும் கலைமுகம், இம்முறை ஏப்ரல்-ஜூன் காலப்பகுதிக் குரியதாக அமைந்துள்ளது. வழமை போன்று காத்திரமான கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் என வாசகர்களுக்கு பயனுள்ள படைப்பு களைத் தாங்கி கலைமுகம் இதழ் வெளிவந்துள்ளமை குறிப் பிடத்தக்கதாகும். (ஆ)



# திடீர் புனரமைப்பு

சண்டிலிப்பாய்ச் சந்தியில் இருந்து சங்கானைக்கு செல்லும் வீதிக்கு தார் ஊற்றி, செப்பனிடும் பணிகள் நேற்று நண்பகல் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆயினும் மானிப்பாய்-பொன்னாலை வீதி விரைவில் காப்பெற் வீதியாக புனரமைக்கப்படவுள்ளதாக சில தினங்களுக்கு முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன. இந்த நிலையில் திடீரென வழமையான புனரமைப்புப் பணிகளே குறித்த வீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், காப்பெற் வீதியாக்கும் திட்டம் கைவிடப்பட்டு விட்டதோ என்று பொதுமக்கள் சந்தேகம் வெளி யிட்டுள்ளனர். (ஆ)


## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

'எதிரொலி' மாலைத் தினசரிக்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

வேலை நேரம்: மாலை 4 மணி முதல் மாலை 6.30 வரை (இரண்டரை மணித்தியாலங்கள்)

வேதனம்: 15,000 + ஊக்கப்படி

தொடர்புக்கு:
021 300 4848, 077 657 5907
ethirolimedia@gmail.com




## நாளை நாளும் கோளும்

02.07.2017 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் ஆனி மாதம் 18ஆம் நாள்

நவமி பி.இ. 12.02 வரை | சித்திரை பி.இ. 03.44 வரை | சித்தயோகம்

இராகுகாலம் 04.26-05.56 | சுபநேரம் 08.56-10.26 | எமகண்டம் 11.56-01.26

அராலி வடக்கு மயிலியக்குளம் கந்தசுவாமி ஆலயம் கொடி

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| யோகம் | நலம் | நட்டம் | இலாபம் | போட்டி | புகழ் | ஓய்வு | மறதி | ஆதரவு | முயற்சி | நிம்மதி | உழைப்பு |

எதிரொலி
Ethiroli

# ஏற்கமுடியாது




அரச சார்பற்ற நிறுவனங்கள் என்ற சமூக அமைப்புகளை கட்டுப்படுத்த வேண்டும் என்றும் பௌத்த விகாரைகள் விவகாரங்களில் தலையிட முடியாது என்றும் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தொடர்ச்சியாக தெரிவித்து வரும் கருத்துகளை ஏற்க முடியாது. இந்த கருத்துகள் சிறுபான்மை மக்களையும் அரச சார்பற்ற நிறுவனங்களையும் நமது அரசாங்கத்தில் இருந்து அந்நியப்படுத்துகின்றன. கடந்த தேர்தல் காலங்களில், தமிழ், முஸ்லிம் வேட்பாளர்களையும் புறந்தள்ளிவிட்டு விஜேதாச ராஜபக்ஷவுக்கு விருப்பு வாக்குகளை அளித்த கொழும்பு வாழ் சிறுபான்மை வாக்காளர்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது என, ஜனநாயக மக்கள் முன்னணி-தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் கூறியுள்ளார். (உ)



மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் புதிதாக அமைக்கப்பட்ட பள்ள மடு–மகிலங்குளம் பிரதான வீதியை அமைச்சர் றிஸாட் பதியுதீன் மற்றும் வட மாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன் ஆகியோர் இணைந்து இன்று காலை வைபவ ரீதியாக திறந்து வைத்தனர். (உ-02)

## அந்த நாள் ஞாபகம்.....!



**1881.07.01**

உலகின் முதலாவது சர்வதேசத் தொலைபேசி அழைப்பு கனடாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் ஏற்படுத் தப்பட்டது.

### பூநகரியில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளவரமற்ற பனைகள் நிறைந்த வெளிப்பகுதிக்குச் சென்று பார்த்தனர். அப்போது சுமார் இருபது பேர் விடுத லைப் புலிகளின் வரிப்புலிச் சீருடையை போன்ற ஆடைகளோடும், கையில் துப் பாக்கிகளோடும் நடமாடினர். அதனால் உண்மையாகவே புலிகள் வந்துவிட்டார் களோ என்று அவர்கள் சந்தேகப்பட்ட னர்.

ஆயினும் சிறிது நேரத்தின் பின்னரே அது ஒரு படப்பிடிப்பு என்று தெரியவந்தது.

தமிழ், சிங்கள மொழிகளில் தயாரா கும் 'அவள்' என்ற திரைப்படத்தின் படப் பிடிப்புக்காகவே இவ்வாறு புலியுடை யோடு நடிகர்கள் பூநகரியில் வந்திருந்த னர் என்பதை அறிந்த பின்னரே அங்கு நிலவிய பரபரப்பு தணிந்தது. (ஆ)

### அமைச்சுக்களுக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட் டுள்ளது. அண்மையில் பல்கலைக் கழக மாணவர்கள் சுகாதார அமைச்சிற்குள் புகுந்து சொத்துக் களை கடுமையாக சேதப்படுத் தினர். இந்த விடயம் மற்றும் புலனாய்வுப் பிரிவு வழங்கியுள்ள அறிக்கைகளை அடிப்படையாக கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய சுகாதார அமைச்சு, உயர் கல்வி அமைச்சு, மின்சக்தி அமைச்சு, போக்குவரத்து அமைச்சு உட்பட சில அமைச்சுக்கு கடும் பாதுகாப்பு வழங்கும் வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது. (உ)

### வெட்கப்படுகிறேன்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எல்லோருக்கும் இருக்கவேண்டும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர் வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ் தீவக வலய அதிபர்கள், கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் கலந்து கொண்ட நிகழ்வில் உரையாற்றிய அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில், ஒரு நிறுவனத்திலோ அல்லது நிர்வாகத் திலோ தலைமை எந்தளவுக்கு சரியாக இருக்கிறதோ அல் லது தலைமை எந்தளவுக்கு வினைத்திறன் மிக்கதாக இருக்கிறதோ அந்தளவுக்கு அதனது ஏனைய பாகங்களும் செயற்ப டும். அந்தவகையில் முதலில் எங்களு டைய கல்வி அமைச்சினுடைய உயரதி காரிகளோடு பேசி அங்கே புதிய மாற்றங் களை கொண்டுவரவேண்டும். அது தொடர் பாக ஏற்கனவே இந்தத்துறையில் பணி யாற்றி ஓய்வு பெற்ற திறமைசாலிகளுடன் கலந்துரையாடுவோம். தேவைப்பட்டால் சில ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப் படும் - என்றார். (எ)

### அமைச்சர்கள்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறினார்.

எவ்வாறாயினும், கூட்டாட்சி அரசாங் கத்திலிருந்து, இவர்கள் விலகவுள்ளமை குறித்து தான் அறிந்திருக்கவில்லை என்று, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். (எ)

### மக்கள்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் நடைபெற் றது. அங்கு உரையாற்றிய அவர், இதில் சிறுபான்மை யினரின் அதிகாரப் பகிர்வுக்கு முக்கியத்துவம் அளிக்கும் படியிலான செயற்திட்டங்களுக்கு முக்கியத்துவம் வழங் கியுள்ளதாகவும் தெரிவித்தார். (எ)

### பொலிஸார்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல் ரகசிய கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த னர். இந்நிலையில் இன்று அதிகாலை ஹன்ரர் வாகனம் ஒன்று மண் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது. குறித்த வாகனத்தை பொலிஸார் மறிக்க முற்பட்டுள்ளனர். அதன்போது வாகனம் தப்பிச் செல்ல முற்பட்டிருக்கிறது. உடனடியாகவே வாகனம் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட னர். அதன்போது வாகனத்தில் மணல் ஏற்றவந்வர்கள் வாகனத்தை விட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். வாக னத்தைக் கைப்பற்றிய பொலிசார் தப்பிச்சென்றவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.(எ-03)

### கொழும்பை... (முதலாம் பக்கத்தொடர்ச்சி)

கொழும்பில் மேற்கொண்டு வருவதாகவும் அமெ ரிக்கா கூறியுள்ளது.

இந்த நிலையில் கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பிரதானிகள் அங்கு செல்வதனை மட்டுப்படுத்தியுள்ளதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.(ஆ)

### வடக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.ஏ.சுமந்திரனின் ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது. அங்கு கருத்துரைத்த அவர்,

வடக்கு கிழக்கு இணைப்பு தற்போது சாத்தியப் படாது எனினும் வடக்கு கிழக்கு இணைக்கப்பட வேண்டும் என்ற கூட்டமைப்பின் நிலைப்பாடு எழுத்தில் அச்சிடப்பட்டு இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக வழிநடத்தல் குழுவில் அங்கம் வகிக்கும் ஈ.பி.டி.பி கட்சியின் டக்ளஸ் தேவானந்தா மற்றும் மனோ கணேசன் போன்றோர் வடக்கு கிழக்கு இணைப்பை வலியுறுத்தவில்லை எனவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மட் டுமே வடக்கு கிழக்கு இணைப்பை வலியுறுத்தி வருகின்றனர்.

எனவே தான் வடக்கு கிழக்கு இணைக்க வேண்டுமாயின் கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் ஒத்துழைப்பு இல்லாது இணைக்க முடியாது என்பதுடன் முஸ்லிம் கட்சிகளுடன் பேச்சுவார்த் தையை ஏற்படுத்தி நடாத்தி வருகின்றோம் என்றார்.

இருப்பினும் புதிதாக அமையவுள்ள அரசியில் யாப்பானது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வான ஒன்றாகவே அமையவுள்ளது என்பதை கூறிக்கொள்கின்றேன். எனவே தான் நாம் ஆட்சி மாற்றத்திற்கு ஒத்துழைத்து நல்லாட்சி அரசாங் கத்தை உருவாக்கி அரசாங்காத்திற்கு ஆதரவும் வழங்கி வருவதாகஅவர் மேலும் தெரிவித்தார். (எ)

## பல்கலைக் கழகத்தை வீழ்த்தியது பாசையூர் சென். அன்ரனிஸ்

நவிண்டில் கலைமதி யின் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற போட்டி ஒன்றில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட் டுக்கழகம் வெற்றிபெற் றது.

இந்த ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் அணி, யாழ். பல்கலைக் கழகத்தை எதிர்த்து விளையாடியது.

ஆரம்பம் முதல் எதிரணியை கோல் அடிக்க விடாது தனது ஆதிக்கத்தையே தக்க வைத்துக்கொண்ட சென். அன்ரனிஸ் அணி, ஆட்ட நேர முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதேவேளை, இத் தொடரில் இன்று இரவு 8.30 மணிக்கு நடைபெற வுள்ள போட்டி ஒன்றில் வதிரி பொமேர்ஸ் அணியை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன் அணி மோத வுள்ளது. (ஐ)

## நிதிக்கொடுப்பனவு



அவுஸ்திரேலியா இலங்கை மாணவர் கல்வி நிதியத்தினால் உதவிபெறும் கிழக்கு மாகாணத் தில் கல்முனை பெரியநீலாவணை விஷ்னு மகா வித்தியாலயத்தில் கல்வியை தொடரும் மாணவர்களுக்கான தகவல் அமர்வும் நிதிக்கொடுப்பனவு நிகழ்வும் அண்மையில் வித்தியாலய அதிபர் கமலநாதன் தலைமையில் நடைபெற்றது.தாய்மாரும் கலந்துகொண்டனர். (உ)


துர்க்கை அம்மன் ஜோதிட நிலையம்

வம்ச பரம்பரை ஜோதிடம்

பண்டித் ராமாதாஸ்சு






துல்லியமாக கணித்து பார்க்கப்படும் விடயங்கள்

கைரேகை, நாம நட்சத்திரம், ஜாதகம், கல்வி, தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லக்ஷ்மி வசீகரம், திருமண யோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்து சாஸ்திரம், வீட்டில் வதிவிடப் பிரச்சினை, பயண எதிரிகள், கண் திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் குடும்பத்தில் ஒற்றுமையாக நிலைத் திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல், இப் பிரச்சினைகளிலிருந்து விடுபட என்னை அனுகுங்கள். நீங்கள் பல சாஸ்திரக்காரர்களை சந்திக்கலாம். ஆனால் ஒரு முறை வந்து என்னைச் சந்தியுங்கள் உங்கள் பிரச்சினைகள் யாவும் தீர்த்து வைக்கப்படும்.

100 % உத்தரவாதம்

Mobile. : 075 5419998 / 075 2648171

நேரம்: காலை 8 மணி முதல் மாலை 7 மணி வரை (7 நாட்களும்)

117 நாவலர் வீதி, மாருதி இன்பக்ஸ் புக்கிங் சென்ரர் அன் ரான்ஸ்போட், யாழ்ப்பாணம் (நாவலர் பாடசாலை அருகில்)


இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 01.07.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.